டால்பின்

DOLPHIN ®
Primary Books

# நவீன தமிழ் மலர்



வகுப்பு
3

# பயிற்சி

**எழுத்துகளை அறிந்து சரியான எழுத்துகளை நிரப்புக.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| க் | + | ஏ | - | கே | ஞ் | + | ஆ | - | |
| ம் | + | உ | - | மு | ன் | + | | - | னீ |
| ட் | + | உ | - | டு | ப் | + | ஔ | - | |
| ம் | + | ஆ | - | மா | த் | + | | - | தா |
| ல் | + | இ | - | | ச் | + | ஓ | - | |
| வ் | + | ஏ | - | | | + | | - | ரு |

**நானே எழுதுவேன்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | + | | - | | | + | | - | |
| | + | | - | | | + | | - | |
| | + | | - | | | + | | - | |
| | + | | - | | | + | | - | |

# 6. கதையும் கருத்தும்




ஒரு அறையில் நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்துகொண்டிருந்தன. அவற்றின் பெயர்கள் அன்பு, அமைதி, அறிவு நம்பிக்கை என்பதாகும்.



அப்போது ஒரு சிறுவன் அந்த அறையின் கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைகிறான். வாசல் வழியாக காற்றும் வேகமாக அறையில் நுழைகிறது. இதனால் மெழுகுவர்த்திகள் எரிய முடியாமல் தவிக்கிறது.



காற்றுடன் கடுமையாக போராடியும், காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அன்பு, அமைதி, அறிவு என்ற மூன்று மெழுகுவர்த்திகளும் அணைந்து விடுகின்றன. நம்பிக்கை என்ற மெழுகுவர்த்தி மட்டும் தொடர்ந்து போராடி காற்றின் வேகத்தை சமாளித்து எரிந்துகொண்டிருந்தது.

# 11. நினைவு கொள்வோம்

**பயிற்சி:**

**கொடுக்கப்பட்ட எழுத்துகளை பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்குக.**

**பா**

ட்டு ___பாட்டு___

ல் ______________

க்கு ______________

டல் ______________

லம் ______________

தம் ______________

ட்டி ______________





**சி**

த்திரம் ______________

வப்பு ______________

ங்கம் ______________

ற்பம் ______________

ற்பி ______________

லை ______________

றப்பு ______________





## தெரிந்து கொள்வோம்

சந்திரனில் எண்ணற்ற மலைகள் உள்ளன. எல்லாமே 6000 மீட்டர் உயரமுள்ள சிகரங்கள். சந்திரனின் தென் துருவத்திற்கு அருகில் லீப்னிட்ஸ் மலை உள்ளது. அது எவரெஸ்ட் சிகரத்தைவிட உயரமானது. அதன் உயரம் 10,600 மீட்டர்.

# 13. தமிழ்நாடு - தெரிந்து கொள்வோம்

| | |
|---|---|
| 1. மிகப்பெரிய அணை | - மேட்டூர் |
| 2. மிகப் பழமையான அணை | - கல்லணை |
| 3. மிகப்பெரிய தேர் | - திருவாரூர் தேர் |
| 4. மிகப் பெரிய சிலை | - திருவள்ளுவர் சிலை (குமரி) |
| 5. மிக நீளமான ஆறு | - காவிரி |
| 6. மிக நீளமான கடற்கரை | - மெரினா |
| 7. மிக நீளமான பாலம் | - பாம்பன் பாலம் |
| 8. மிகப்பெரிய பேருந்து நிலையம் | - கோயம்பேடு பேருந்துநிலையம் |
| 9. மிகப்பெரிய நந்தி | - தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் நந்தி |
| 10. மிகப்பெரிய தொலைநோக்கி | - வைனுபாப்பு தொலைநோக்கி (காவலூர்) |








சற்று தூரத்தில் சர சர எனச் சத்தம் கேட்டது. இருவரும் உற்று நோக்கினர். அங்கு ஒரு பாம்பு ஊர்ந்து ஊர்ந்து செல்வதைக் கண்டனர். மான்கள் கூட்டம் கூட்டமாகத் துள்ளி துள்ளி அழகாகக் குதித்து ஓடின.



இருவரும் மெதுவாக நடந்து சென்றனர். சிறிது தூரம் சென்றவுடன் வெள்ளை முயல் ஒன்று புல்லை கடித்துத் தின்று கொண்டிருந்தது. குமரன் அதன் புசுபுசு உடலைப் பார்த்ததும் பிடிக்க ஆசைப்பட்டு ஓடினான். அது குதித்து குதித்து ஓடி மறைந்து விட்டது. குமரன் சோர்வோடு செல்வத்திடம் வந்தான். செல்வம் அவனைத் தேற்றினான். இருவரும் மகிழ்ச்சியில் திளைத்தனர். இயற்கை காட்சிகளை பார்த்து இரசித்த குமரன் சற்று ஓய்வெடுத்துவிட்டு செல்லலாம் அண்ணா என்று கூறினான். சரி என்று கூறிய செல்வம் ஒரு மரத்தடியில் அமர்ந்தான். அப்போது குமரன், அண்ணா, விடுகதை போட்டு விளையாடலாமா? என்று கேட்டான். இருவரும் விடுகதை போட்டு விளையாடினர். நாமும் விடை கூறலாமா?

# 21. மழை எவ்வாறு பெய்கிறது?

தேன்மொழி: அப்பா! இப்பொழுது மழை பெய்கிறதே. இது வானத்திருந்துதானே பெய்கிறது?

அப்பா: ஆம் செல்வி, மழை வானத்திருந்துதான் பெய்கிறது.

தேன்மொழி: அப்படியானால், வானத்தில் நீர்வீழ்ச்சி உண்டா, அப்பா?

அப்பா: இல்லை, இல்லை அங்கு நீர்வீழ்ச்சி ஏதும் கிடையாது.

தேன்மொழி: பின்னர் மழை எப்படித்தான் பெய்கிறது? ஒரே அதிசயமாக இருக்கிறதே?

அப்பா: வானத்தில் நீ மேகங்களைப் பார்த்திருக்கிறாயா?

தேன்மொழி: ஆம், அப்பா.

அப்பா: இந்த மேகங்கள்தான் நமக்கு மழையைக் கொண்டு வருகின்றன.














Designed, Printed & Published By :

**Sekar Publishers**

An ISO 9001:2000 Certified Company
3/1078/2, Meenampatti, Sattur Road, Sivakasi - 626189.
Tamilnadu - India. Tel : +914562 274132
Your usage feed backs are cordially invited.
Do mail us to: sekharuma@hotmail.com & sekarpublishers@gmail.com

ISBN 978-93-83753-47-5

9789383753475